# சம்மாந்துறை பிரதேச சபையின் 19 வது கூட்டறிக்கை
# 2019.09.10

சம்மாந்துறை பிரதேச சபையின் 19 ஆவது அமர்வு 2019.09.10 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப். எம்.ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 19 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் இன்றைய சபை அமர்விற்கு வருகை தர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் 01**

சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எமது சபையின் முக்கிய வருமானமான ஆதண வரி தொடர்பாக 51 கிராம சேவகர் பிரிவுகளில் தற்போது சட்ட பூர்வமாக 21 கிராம சேவக பிரிவுகளில் ஆதண வரி அறவிடப்படுகின்றது. தற்போது இவ் வரிகளை முதலாம் திகதியில் இருந்து சபைக்கு வருகை தராமல் online மூலம் செலுத்தலாம். எனவே 21 குறிச்சிகளில் உள்ள எந்தவொரு நபரும் தமது வரிகளை online மூலமாக சரிபார்க்கலாம். இம் முறை எமது சபைக்கு பாரிய முன்னேற்றம் ஆகும். இதற்கு மேலாக நாம் 2013 ஆம் ஆண்டில் வர்த்தமானி அறிவித்தலின் படி 22 குறிச்சிகளுக்கு இதுவரையும் மதிப்பீட்டு திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்படாமல் உள்ளது. இக் குறிச்சிகளில் 17000 வீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கத்தின் பிரச்சினை காரணமாக இவைகளுக்கு ஆதணவரி அறவீடு செய்வதற்குரிய வாய்ப்பு இல்லாமல் உள்ளது.

எனவே, நான் உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களுடன் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்தோம். அதாவது ஓய்வு பெற்ற மதிப்பீட்டாளர் சுபைர் அவர்களின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் 05 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், 05 அல்லது 10 உதவியாளர்களை பயன்படுத்தி வரி மதிப்பீடுகளை மேற்கொள்ளலாம். இதன் பின்னர் வரும் உத்தியோகபூர்வமான மாற்றங்களையும் செய்து முடிக்கலாம். இவற்றை செய்யாமல் இருந்தால் 22 குறிச்சிகளுக்கு மேலாக சென்னெல் கிராமம் - 01, சென்னெல் கிராமம் - 02, புளக் ஜே மேற்கு - 02, நெய்னாகாடு, மல்வத்தை - 04, மல்லிகைதீவு, வளத்தாப்பிட்டி போன்ற இடங்களில் இதுவரை வேலைகள் செய்படாமல் உள்ளது. எனவே இவ் வேலைகளை எமது காலத்திலேயே செய்து முடிக்க வேண்டும். ஏனென்றால் சபை முடிவடைய முன்னர் நகர சபையாக மாறுவதற்குரிய சகல தகைமைகளையும் கொண்டிருக்க வேண்டும். இதனால் இவைகள் அனைத்தும் உள்வாங்கப்பட வேண்டும்.

**தீர்மானம் 02**

ஆதண வரி அலகுகளுக்காக 2020 ஆம் ஆண்டுக்காக விநியோகிப்பதற்காக கணனியில் பதியக்கூடிய 8000 K படிவங்கள் அச்சிடுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம். றியாஸ் |

**தீர்மானம் 03**

புதிதாக ஆதண வரி அறவீடு செய்வதற்காக 2013 ஆம் ஆண்டில் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்ட 22 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள கீழ் வரும் வட்டாரங்களில் (மீதமாயுள்ள மற்றும் புதிதாக உள்ள பிரிவுகள்) ஆதண வரி தற்காலிக மதிப்பீடு ஓய்வு பெற்ற அரச வரி மதிப்பீட்டாளரின் கீழ் 05 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும், 05 அல்லது 10 உதவியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்தவும், அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை வழங்கவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

1. சின்னப்பள்ளி வட்டாரம்
2. சம்மாந்துறை மத்திய வட்டாரம்
3. தைக்காப்பள்ளி வட்டாரம்

4. மட்டக்களப்புத் தரவை வட்டாரம்
5. வீரமுனை வட்டாரம்
6. விளினையடி வட்டாரம்
7. மலையடி வட்டாரம்
8. மல்கம்பிட்டி வட்டாரம்
9. மல்வத்தை வட்டாரம்
10. வளத்தாப்பிட்டி வட்டாரம்

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வருமான வரியை பொருத்தவரையில் எமது சபை 4.7 மில்லியன் பெற்றுள்ளோம். அதில் 1/3 பங்கு இந்த வருடத்திற்குரியது. ஏனையவை இன்னும் வரவேண்டியுள்ளது. இந்த வருட வரவு செலவு திட்டத்தில் 03 மில்லியன் குறைவாக உள்ளது. இதனை 03 மாதத்திற்குள் சமப்படுத்த வேண்டும். அவ்வாறு சமப்படுத்தப்படாவிட்டால் எமது சபையில் நிதி பற்றாக்குறை ஏற்படும். தற்போது எமக்கு இருக்கும் பெரிய சவால் என்னவென்றால் மல்வத்தையில் அமைந்துள்ள கடை ஒன்று உடைந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் விச வைத்தியர் வீதியில் உள்ள கல்வெட்டையும் செய்ய வேண்டும். இவற்றை திருத்தம் செய்வதற்கு அண்ணளவாக 7 ½ இலட்சம் தேவை. இவ் வேலைகளை செய்வதற்கு எமது சபையின் வருமானத்தை கூட்ட வேண்டும்.

LDSP ஒவ்வொரு வட்டாரமாக Priority செய்து அதில் இனங்காண்கின்ற திட்டங்களுக்கு நிதி கிடைக்கும் என்று நினைத்தோம். ஆனால் அப் பயிற்சி நெறியில் நான் அறிந்தது World Bank இன் திட்டம் இதற்கு மாறானது. World Bank கூறுவது ஊருக்கு ஒரு திட்டம் இருக்க வேண்டும். பிரதேச செயலகம், பிரதேச சபை இணைந்து கிராம அபிவிருத்தி திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். இதன் மூலம் வரும் Priority திட்டத்திற்கு அவர்கள் ஒரு பங்களிப்பை மாத்திரம் செய்வார்கள். ஒரு வருடத்தில் 02 தடவை பணம் தருவதாக கூறினார்கள். ஆனால் அதில் வரும் தொகை நாம் இனங்கண்ட Priority இருந்தால் மாத்திரம் செய்யலாம். மேலதிகமாக தேவைப்பட்டால் நாம் வேறு வழியில் தேட வேண்டும். அவர்கள் அத் திட்டத்திற்காக பூரணமாக தரமாட்டார்கள்.

LDSP இன்னும் தெளிவில்லாத நிலை உள்ளது. கௌரவ அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையில் உள்ள IDD Project இன் கீழ் நூலக எஞ்சிய வேலைகள், வீரமுனையில் உள்ள 03 பாதைகள், ஜமாலியா பள்ளிவாசலின் எஞ்சிய வேலைகள் போன்றவற்றை அங்கீகரித்து பிரதம செயலாளருக்கு கிடைத்துள்ளது. அவை உத்தியோகபூர்வமாக கிடைத்த பின் இவ் லேைகளை செய்ய வேண்டும்.

**தீர்மானம் 04**
எமது சபையினால் தயாரிக்கப்பட்ட "LDSP" செயற்திட்டத்திற்காக தனியான வங்கிக் கணக்கொண்றினை திறப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற மாத அமர்வில் கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் முன்வைத்த இலத்திரனியல் விளம்பரப் பலகை பொருத்துவதற்கு அண்ணளவாக 4 மில்லியன் செலவாகும். ஆனால் எமது சபையில் நிதி ஒதுக்கீடு இல்லாததனால் LLDF நிறுவனத்தில் கடன் பெற்று அதனை செய்ய வேண்டும்.

**தீர்மானம் 05**
எமது சபை மூலம் இலத்திரனியல் விளம்பரப் பலகை பொருத்துவதற்கும் மற்றும் வளத்தாப்பிட்டியில் மின்சார பிரேத எரிப்பு நிலையம் அமைக்கவும் நிதி ஒதுக்கீடு இல்லாததன் காரணமாக LLDF நிறுவனத்தில் கடன் பெற்று அதனை நடைமுறைப்படுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற மாத சபையின் வரவு செலவு திட்டத்தில் ஏதாவது கருத்துக்கள் இருந்தால் 15 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

RDA, RDD சபைகளுக்குரிய பாதைகளில் ரன்மாவத், I Project, Jaica Project போன்றவற்றால் செய்கின்ற வேலைகள் தவிசாளருக்கு அறிவித்தல் இல்லாமலும் சபைக்கு உத்தியோகபூர்வமாக RDA இல் இருந்து அறிவித்தல் இல்லாமலும் பள்ளி வாசலில் அறிவிக்கப்படுகின்றது. இது அத்துமீறி நடக்கின்றது. இதனால் உத்தியோகபூர்வமாக எமது அனுமதி, மேற்பார்வை இல்லாமல் எந்தவேலையும் ஆரம்பிக்கக்கூடாது. எமது சபை ஏனைய சபைகளை போல் இல்லாமல் எந்த அபிவிருத்திக்கும் தடையாக இருந்ததில்லை. இதனால் அவர்கள் எமக்கு அறிவித்து சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சென்று பார்வையிட்டு பிழைகளை இனங்கண்டதன் பின்னர்தான் அவைகளை செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, RDD இற்கு சொந்தமான பாதை மல் 13ம் வீதி. அவ் வீதியில் ஒரு மதகு செய்ய வேண்டும் என்று கடந்த ஒரு வருட காலமாக பேசி வருகின்றோம். தற்போது அவ் வீதிக்கு காபட் இட இருக்கின்றனர். அதற்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் கொடுத்திருக்கின்றோம். நான் RDD பொறியியலாளரை சந்தித்து இது சம்மந்தமாக கூறினேன். அவர்கள் அந்த கல்வெட்டுக்கு முன் நிறுத்தி இவற்றை செய்து முடித்த பின் எஞ்சியதை செய்வதாகக் கூறியுள்ளார். யானைகள் ஆரம்பத்தில் பயிர்களுக்கு மாத்திரம் பிரச்சினையாக இருந்தது. ஆனால் தற்போது உயிர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. விவசாய அமைப்புகள் சென்று GA, வன விலங்கு அதிகாரிகளை சந்தித்து ஊர் காவலர்களை உள்வாங்கி அவர்களுடன் சபையும் இணைந்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறினோம்.

ஆனால் ஏப்ரல் 21 ஆந் திகதி நடைபெற்ற பிரச்சினையினால் இந் நடவடிக்கை இல்லாமல் தற்போது யானைகள் ஊருக்குள் வருகை தந்து பொருள் சேதம் மட்டுமல்லாமல் உயிர் சேதமும் ஏற்படுத்துகின்றது. அதனால் இச் சபை கௌரவ உறுப்பினர்களது கருத்துக்களையும் உள்வாங்கி உத்தியோகபூர்வமாக GA இற்கு மாத்திரம் அல்லாமல் வன விலங்கு அமைச்சருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, யானை பிரச்சினை என்பது எமது பிரதேசங்களில் மாத்திரமல்ல இலங்கை பூராகவும் தற்பொழுது பாரிய அளவில் வரும் பிரச்சினையாகும். எமது பிரதேசங்களை பொருத்தவரையில் வளத்தாப்பிட்டி பிரதேசத்தை அண்டிய காட்டுப் பகுதியை தவிர சம்மாந்துறை பிரதேசம் அல்லது காரைதீவு பிரதேசங்களில் காடுகள் பெரிதாக இல்லை. இருப்பினும்

உணவுக்காக வரும் யானைகள் எமது பிரதேசங்களில் பல அழிவுகளை ஏற்படுத்துகின்றது. இதனை தடுப்பதற்காக நாம் முதலாம் கட்டமாக எங்களது வளத்தாப்பிட்டி கிராமத்திலே உள்ள பொது கட்டடத்தை தற்காலிகமாக வழங்க வேண்டும் என்று வழங்கினோம்.

ஆனால் அவர்கள் அக்கட்டடத்தில் இருந்து கொண்டு யானையை தடுப்பது அவர்களது கடமையல்ல யானைகளுக்கு வழி எடுத்து கொடுப்பதுதான் கடமையாக இருந்து கொண்டிருக்கின்றது. அவர்களுடைய கருத்தும் அதுவாகத்தான் இருக்கின்றது. இதற்கு முறையான செயற்பாடு தேவை அதற்காக சபையோ அல்லது நாம் எடுக்கும் எல்லா முன்மொழிவுகளையும் அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் அனைத்து பிரதேச சபைகளையும், உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கி இப் பிரதேசத்திற்கு யானை வேலியோ அல்லது மின்சார வேலியோ அமைக்க வேண்டும். அப்படி அவர்கள் அமைக்காவிட்டால் எங்களது எல்லைகளிலாவது யானை வேலிகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து தர ஒரு கோரிக்கை முன்வைக்க வேண்டும்.

பொதுக் கட்டடத்தை அதிமேதகு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வன துறைசார் அமைச்சர்களிடம் கலந்துரையாடி அவர்களை இக் கட்டடத்தில் இருந்து வெளியேறுமாறும், வேறு இடத்தை தெரிவு செய்து கொள்ளுமாறும் கூறினார்கள். இதனை நான் எமது சம்மாந்துறை பிரதேச அபிவிருத்தி கூட்டத்திலும் முன்வைத்தேன். எனது கருத்து என்னவென்றால் இந்த அலுவலகம் சம்மாந்துறைக்கு தேவை. இதனை வேறு பகுதிக்கு கொண்டு செல்லவிடாமல் வேறு ஒரு பொதுக் கட்டடத்தை வழங்கி இவர்களை சம்மாந்துறையிலே வைக்க வேண்டும்.

அதற்கான கட்டடத்தை வங்களாவடி நீர்பாசன திணைக்களத்திற்கு அருகில் இருக்கின்ற கட்டடத்தை கொடுக்க வேண்டும் என்று நினைத்தோம். பின்னர் அதனை கொடுக்க முடியாது என்ற கருத்தை முன்வைத்தார்கள். எமது வளத்தாப்பிட்டி நீர் பாசன திணைக்களத்தின் கிராமத்தில் ஒரு குளத்தை அண்மித்து பாரிய பரப்பளவு உடைய வளவு இருக்கின்றது. அதில் அலுவலகம் இருக்கின்றது. பழைய கட்டடம் ஒன்றும் உள்ளது. அவ் அலுவலகத்திற்கு இவர்களை மாற்றி அவர்களுக்கு ஒரு இடத்தை நீர்பாசன திணைக்களத்தின் ஊடாக பெற்றுத்தர ஒரு முயற்சி எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, யானைப் பிரச்சினை ஒவ்வொரு வயல் அறுவடையின் போது வயல்களை அழிப்பதும், பொருளாதாரத்தை இல்லாமல் செய்வதாகவும் உள்ளது. இது சம்மந்தமாக பல கூட்டத்தில் எடுத்துரைத்துள்ளேன். முன்னர் நடைபெற்ற DCC கூட்டத்திலும் இது சம்மந்தமாக கதைத்துள்ளோம். தற்போது வளத்தாப்பிட்டியை நாம் ஒரு பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்த வேண்டும். வன விலங்கு பாதுகாவலர்கள் எதற்கு இருக்கின்றார்கள். அவர்கள் வன விலங்குகளில் இருந்து மக்களையும் பாதுகாத்து ஒரு வன விலங்கு பரிபாலனையாக இருக்க வேண்டும். காலத்துக்கு காலம் விதைத்தால் யானைகள் வரமாட்டாது. ஆனால் அறுவடையின் போது பயிர்களை சேதப்படுத்துகின்றது. எத்தனையோ பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். எத்தனையோபேர் DCC கூட்டத்தில் தவிசாளராக இருக்கின்றார்கள். எல்லா வளங்களும் இருந்தும் இம் மிருகங்களை தடுத்து கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

கரையோரத்தில் இருப்பவர்கள் அச்சமடைந்து இருக்கின்றார்கள். எமது சபையில் நிதி இல்லாமல் இருப்பது பாரிய பிரச்சினையாக இருப்பதனால் கடன் பெற்றாவது முக்கியமான இடங்களில் தகுதியான மின்குமிழ்களை போட்டு மக்கள் யானைகள் வருகின்றதா என்பதை பார்த்து ஒதுங்கி போகக் கூடியவாறு செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தொலைக்காட்சியை பார்த்தால் ஒவ்வொரு நாளும் யானைகளின் தொல்லைகளைப் பற்றி கூறப்படுகின்றது. கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியது போல் எல்லா இடங்களிலும் அறுவடையின் போது வருகின்றது. எனவே நாம் ஆக்கபுர்வமாக பயிரையும், கிராமங்களையும் பாதுகாக்க வேண்டும். அம்பாறை தொகுதியில் அம்பாறை பிரதேச செயலகம், தமன பிரதேச

செயலகம், நாமல் ஓயா பிரதேச செயலகம் போன்ற பிரதேசங்களில் அதிகளவான குடியேற்றங்கள் நடந்துள்ளது. அதனால் எல்லா கிராமங்களுக்கும் யானை வேலி இடுவதால் யானைகள் இலகுவாக எமது பகுதிக்குள் வரும். எனவே அரசியல் ரீதியாக அல்லாமல் ஆக்கபூர்வமான வேலைகளை செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிங்களப் பகுதிகளில் குடியேற்றங்கள் நடந்துள்ளது. அக் குடியேற்றங்களில் அடுத்த அபிவிருத்தியின் அடிப்படையில் பாரிய திட்டங்களாக அரசுக்கு அப்பால் தமன பிரதேசத்தில் இரவு காலங்களில் யானை பாதுகாவலர்கள் அவர்களின் கைகளில் வெடிபொருட்களை எடுத்துக் கொண்டு குறிப்பிட்ட தூரத்திற்கு நடந்து சென்று மேற்பார்வை செய்வார்கள். எனவே அவசரமாக தேவைப்படுகின்ற பாதுகாப்பின் அடிப்படையில் எமது சபையினால் 05 அல்லது 10 யானை பாதுகாவலர்களை நியமித்தால் யானைகள் வருகின்ற நேரத்திலாவது உயிர்களையும், பயிர் சேதங்களில் இருந்தும் பாதுகாப்பு பெறலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, யானை பிரச்சினை சம்மந்தமாக எமது கௌரவ உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துக்கள் உண்மையிலே சிறந்தது. சபை மூலம் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் எம்மை பொருத்தமட்டில் எனது கருத்தாக அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கீழ் உள்ள அமைச்சின் கீழ் இப் பாரிய அழிவை நாம் எல்லோரும் சந்திக்கின்றோம். அவ்வாறான அமைச்சை வைத்திருக்கின்ற அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு இச் சபையின் தீர்மானமாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஊழியர்கள் குறைபாட்டையும், அதற்கான மேலதிக வசதிகளையும் ஏற்படுத்தி இப் பிரச்சினைகளில் இருந்தும் யானைகள் வருகின்ற வழியில் வேலிகளை அமைத்தும் யானைகள் வருவதை தடுக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அவர்களின் கருத்தை நான் எதிர்க்கின்றேன். ஏனெனில் வன ஜீவராசிகள் அமைச்சு காமினி ஜெயவிக்ரம பெரேரா அவர்களின் பொறுப்பில் இருக்கின்றது. ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர். ஜனாதிபதி அவர்களிடம் இருப்பது சுற்றாடல் அமைச்சு ஆகும். ஆகவே இதனை காமினி ஜெயவிக்ரம பெரேரா அவர்களுக்கு அனுப்புவதே சிறந்தது. அது மாத்திரமல்லாமல் மாவட்ட பிரதி வன இலாக்கா பணிப்பாளர் அவர்களுக்கும் அனுப்பி அவர்களையும் அழைத்து இந்த கருத்தை முன்வைப்பது சிறந்ததாக இருக்கும் என கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் அம்பாரைக்கு செல்லுகின்ற வேளைகளிலும் வன விலங்கு அலுவலகத்திற்கு சென்று இது சம்மந்தமாக பேசினேன். ஏனென்றால் அவர்களுக்கும் தெரிய வேண்டும். ஆனால் அவர்களும் ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளார்கள்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற மாதத்திற்கு முதல் NGO யானை பாதுகாப்பு சம்மந்தமாக ஒருவர் வந்திருந்தார். அவர் 300 வருடங்களுக்கு முன் இது காடாக யானை வாழ்ந்த இடத்தை விவசாய நிலமாகவும் வீடாகவும் மாற்றிவிட்டீர்கள். தற்போதைய ஆய்வின் படி யானைகள் செல்வதற்கு ஒரு வழி ஒன்று உள்ளது. அந்த வழியாக சென்றுதான் மீண்டும் அதே இடத்திற்கு வரும். சேகப்பற்று வட்டையில் உள்ள நாணப்புல்லை மிகவும் விரும்பி உண்ணக்கூடியது. அதனால் உணவுக்காக விவசாய அறுவடையின் பின்னர் சாப்பிடுவதற்காக வருகின்றது. ஆகவே எந்த வழியால் வரும் என்று எமக்கு தெரியாது.

எனவே, யானைகள் வரக்கூடிய இடங்களில் முள்ளுகளை உடைய சிறிய எலுமிச்சை கன்றுகளை வைக்கலாம். அவ்வாறில்லாவிட்டால் தேன் பூச்சியின் சத்தத்தினால் யானைகள் மிரளக்கூடியது. இப்படியான உபாயங்களை, பொறிவுமுறைகளை பயன்படுத்தி யானைகளை தடுக்கலாமே தவிர வேறு எந்த வழியும் இல்லை. 25KM இற்கு உட்பட்ட பிரதேச சபைகளில் உள்ள பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்று கூடி எமது பிரதேசத்திற்குள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை கட்டுப்படுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தீகவாபியில் உள்ள சிறிய குடியேற்றத்திற்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அறிவியல் ரீதியாக எமது ஊருக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை. ஒவ்வொரு முறையும் வீடுகள், பள்ளிவாசல்கள் மட்டுமல்லாமல் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றதே தவிர இப் பிரதேசம் பாதுகாப்பாக இல்லை. பொன்னம்வெளியை சென்று பார்த்தால் பாதுகாப்பு வேலி அமைத்து அங்குள்ள மக்கள் எந்தவொரு யானைகளின் அச்சம் இல்லாமல் வாழ்ந்து வருகின்றார்கள். இதே போன்ற பாதுகாப்பை ஏன் வளத்தாப்பிட்டி போன்ற இடங்களுக்கு அமைக்க முடியாது.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, யானை பிரச்சினை சம்மந்தமாக வட்டை விதானைகள் உர மானியம் வழங்கப்படும் போது யானை பாதுகாப்பிற்காக ஒரு தொகை பணத்தை அறவீடு செய்கின்றார்கள். அப் பணத்தை அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று எமக்கு தெரியாது. ஆனால் நாம் பரீட்சாத்தமாக அப் பிரச்சினைக்கு தீர்வாக விவசாய அமைப்புகள் அறவிடுகின்ற பணத்தை பெற்று எமது சபை சார்பாக சில நபர்களை நியமித்து அவர்களையும் பாதுகாப்பு ஆளணியினரோடு இணைத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வன விலங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை விட வாகனங்களின் சைலன்ஜர் இல்லாத போது வரும் சத்தத்தினாலும் யானைகளை கட்டுப்படுத்தலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் அனைவரினதும் கருத்துக்களை உள்வாங்கியவனாக, யானைகளின் பிரச்சினைகள் சம்மந்தமாக அரச அதிபருடன் கதைக்க வேண்டும். யானை பாதுகாவலர்களை உள்வாங்குவது சிறந்த கருத்து. இதற்காக எமது சபை ஒத்துழைப்பு வழங்கி விவசாய குழுக்கள் ஊடாக பணங்களை சட்டபூர்வமாக ஒரு கணக்கிற்குள் கொண்டு வர வேண்டும். ஆனால் எமது சபை ஊழியர்களை அல்லது தனிப்பட்டவர்களை நியமித்தால் அவர்கள் இதற்கான ஆயுதங்களை கையாளமாட்டார்கள். எனவே உத்தியோகபூர்வமாக 04 அல்லது 05 ஊர் காவலர்களை பயன்படுத்துவதால் அவர்கள் ஆயுதங்களை சரியான முறையில் பயன்படுத்துவார்கள். சிவில் பாதுகாப்பு படை, பிரதேச சபை, வனவிலங்கு திணைக்களம் என்பன இணைந்து ஒரு அமைப்பை உருவாக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**தீர்மானம் 06**
மனித உயிர்களுக்கும், பயிர்கள், வீடுகளுக்கும் சேதம் விளைவிக்கும் யானைகளின் அட்டகாசங்களில் இருந்து பாதுகாப்பதற்கான வனவிலங்கு திணைக்களம், சிவில் பாதுகாப்புக் குழு, சபையின் குழு எனும் 03 ஐயும் இணைத்து அரசாங்க அதிபரிடம் ஆலோசித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

2019 வரவு செலவுத்திட்ட முன்மொழிவில் ''சமுதாய அடிப்படையிலான பசுமைக் கழகங்களின் மூலம் தூய்மையான, பசுமையான மற்றும் நிலைபேறான சுற்றாடல் ஒன்றினை உருவாக்கல்'' செயற்திட்டத்தினை பிரதேச செயலகம் செயற்படுத்துகின்றது. இதில் எமது சபையும் ஒரு அங்கமாக செயற்பட வேண்டும். மையவாடிக்கு பின்னால் உள்ள இஸ்மாயில் வித்தியாலய பாடசாலை உள்ள பிரதேசம் தொடர்பான நிதி ஒதுக்கீடு பிரதேச செயலகத்திற்கு கிடைத்துள்ளது. இதில் எமது சபையும் இணைந்து எமக்குரிய பங்களிப்பை செய்ய வேண்டும்.

**தீர்மானம் 07**

2019 வரவு செலவுத்திட்ட முன்மொழிவு விடயம் 165 இன் கீழ் ''சமுதாய அடிப்படையிலான பசுமைக் கழகங்களின் மூலம் தூய்மையான, பசுமையான மற்றும் நிலைபேறான சுற்றாடல் ஒன்றினை உருவாக்குதல்'' செயற்திட்டத்தினை பிரதேச செயலகம் செயற்படுத்துகின்றது. எமது சபையும் இத் திட்டத்தில் ஒரு அங்கமாக செயற்படுவதால் குறித்த செயற்திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வலயக்கல்வி அலுவலகத்தில் முன்னர் இருந்த கணக்காளர் Procurement committee இல் உறுப்பினராக இருந்தார். அவருக்கு பதிலாக தற்போது இருக்கும் கணக்காளர் திரு. திருப்பிரகாசம் அவர்களை அங்கத்தவராக நியமிக்க வேண்டும்.

**தீர்மானம் 08**

வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் கணக்காளரை Procurement Committee இல் ஒரு அங்கத்தவராக நியமிக்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ். நிலுவ்பா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 09**

சென்ற மாதம் 2019.08.01 தொடக்கம் 2019.08.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 10**

ஓய்வு பெற்றுச் சென்ற வருமான வரி உத்தியோகத்தர் Mr.MA.றசூல் என்பவரை புதிதாக ஆதனவரி அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ள மீண்டும் 06 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு நீடிப்பு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

**தீர்மானம் 11**
கௌரவ தவிசாளரின் அலுவலகத்தில் பயன்படுத்தும் Printer and Fax இயந்திரம் பழுதடைந்துள்ளதால் புதிதாக ஒரு Printer and Fax இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரீ |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**தீர்மானம் 12**
அமீர் அலி பொது நூலகத்தில் அமைந்துள்ள சுற்று மதில் மற்றும் சேதமடைந்த விளையாட்டு உபகரணங்களை திருத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது ஊரின் வரலாற்று தொகுப்பான ''சம்மாந்துறை வரலாறும், வாழ்வியலும்'' என்ற நூல் தொடர்பான ஒரு கடிதம் ஒன்று கிடைத்துள்ளது. இதனை கொள்வனவு செய்வதற்கு இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் நிதி இல்லை. ஆனால் எதிர்வருகின்ற 10ம் மாதம் வாசிப்பு மாதம், சிறுவர் தினம், முதியோர் தினம் போன்ற நிகழ்வுகள் இருப்பதனால் அதற்காக இந்த வருட வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கிய நிதி மாத்திரம் உள்ளது. எனவே அடுத்த வருட வரவு செலவு திட்டத்தில்தான் கொள்வனவு செய்ய வேண்டும்.

ஆனால் இந் நூல் யாரினால் எழுதப்படுகின்றது, இதற்கான அங்கீகாரம் என்ன என்ற கேள்வி சபைக்கு எழுகின்றது. ஏனென்றால் சபையினால் ஒரு ஆவணம் செய்யும் போது ஒரு பிண்ணனி இருக்க வேண்டும். இக் கடிதத்தில் மௌலவி ஏ.சி.எம்.புஹாரி, பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், அல் ஹாஜ் ஐ.எம்.இப்றாஹிம் ஆகிய மூவரும் கையொப்பமிட்டுள்ளார்கள். இதற்கு எமது சபை பங்காளியாக மாற வேண்டும் என்றால் எப்படி அங்கீகாரம் வழங்கி செலவை செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நிதி என்பது எமது நிதி இல்லை மக்களுக்கான நிதி ஆகும். முதலில் நாம் எமது அபிப்பிராயங்களை முன்வைக்க வேண்டும். 100 பிரதிகளை கொள்வனவு செய்வது என்றால் எமது சபையின் நிதியில் செய்ய இயலாது. முஸ்லிம்களுக்கு என்று ஒரு வரலாறு என்றால் இங்கு எல்லோரும் கலந்து இருக்கின்றோம். எனவே சபையின் நிதியினை ஏனையவர்களின் அனுமதியுடன் தான் நாம் வழங்கலாம். சம்மாந்துறை வரலாறு தமிழ், முஸ்லிம் உறவை வைத்து சமமாக எழுதப்பட்ட வரலாறு என்றால் அதற்கு நாம் ஏகோபித்த ஆதரவு வழங்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையிலே வரவேற்கத்தக்க விடயம் ''சம்மாந்துறை வரலாறும், வாழ்வியலும்'' என்ற நூல். இந் நூலினுடைய பங்காளியாக இச் சபை மாற வேண்டுமாயின் முதலில் நாம் இந் நூல் எவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்பதை பரீட்சிக்க வேண்டும். என்னை பொறுத்தவரை எனது வயதெல்லைக்குள் சம்மாந்துறையினுடைய வரலாறு அனுபவ ரீதியாக என்னால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. நான் அறிந்தவரையில் இச் சபையிலும் 02 அல்லது 03 நபருக்குதான் அனுபவ ரீதியான வரலாறு தெரியும். இதற்கு முன்னர் இச் சபையிலே கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ''சம்மாந்துறை வரலாறு'' என்ற புத்தகம் ஒன்று வழங்கப்பட்டது. ஏறத்தாள அப் புத்தகத்தில் ¾ பகுதியை நான் படித்து முடித்திருக்கின்றேன்.

இதன் பிறகுதான் எனக்கு சம்மாந்துறை எவ்வாறு தோன்றியது என்பதை நான் அறிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பமாக இருந்தது. இந் நூல் எமக்கும் எமது ஊருக்கும் பிரயோசனமான முறையிலே அச்சிடப்பட்டிருந்தால் எமது சபையின் இந்த வருட வரவு செலவு திட்டத்தில் நிதி பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினால் அடுத்த வருட வரவு செலவு திட்டத்திலே இதற்கான தனிப்பட்ட நிதியினை ஒதுக்கி இந் நூல்களை கொள்வனவு செய்ய வேண்டும். எமது ஊரில் உள்ள வாசிகசாலைகள், பாடசாலைகளில் உள்ள வாசிகசாலைகள், முக்கியமான பொது இடங்கள் போன்ற இடங்களுக்கு இந் நூல்களை எமது சபையின் ஊடாக அன்பளிப்பாக செய்து இதனை மக்கள் மத்தியிலும் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் சம்மாந்துறையினுடைய வரலாறு சம்மந்தமாக தெளிவு ஏற்படுமாக இருந்தால் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். எனவே எவ்வளவு நிதியை சபையில் இருந்து பெறமுடியுமோ கூடிய நிதியை பெற்று மக்களுக்கு பிரயோசனம் வழங்கக்கூடியதாக எதிர்வருகின்ற வரவு செலவு திட்டத்தில் இதனை அமுல்படுத்த வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்கள் கூறியது போல் சம்மாந்துறை வரலாறு என்பது எந்தக்காலம் தொடக்கம் எந்தக் காலம் வரைக்கும் என்பது பற்றியும், அதில் உள்ள வரலாறு யாருடைய பின் புலத்தையும் புன்படுத்தாத வகையில் இருந்தால் சிறப்பாக இருக்கும். அதன் பிரதி ஒன்றை பெற்று நாம் ஆய்வு செய்து அனுசரனை வழங்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது உண்மையிலே ஆக்கபூர்வமானது. கட்டாயம் சரித்திரம் தெரிய வேண்டும். இச் சபை பங்காளியாக மாற வேண்டும் என்றால் என்ன சொல்லப்படுகின்றது? எல்லா இனங்களையும் உள்வாங்கப்பட்டுள்ளதா? என்பது கட்டாயமாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அது எமக்கு பிரச்சினையாக வரும்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பழைய மடுவம் இருக்கும் இடத்தில் மாடு அறுக்கும் குப்பைகளை வீசுகின்றார்கள். அப் பிரதேச மக்களிடம் கேட்டால் இங்கு போடச் சொன்னதாக கூறுகின்றார்கள். இன்று காலையில் சென்று பார்த்த போது புதிய மாட்டுக் குப்பைகள் கிடக்கின்றது. இதை கல்லரிச்சல், கைகாட்டி கடைக்காரர்கள் கொண்டு போடுவதாக எனக்கு தகவல் கிடைத்தது. அவ்விடத்தில் ஒரு அறிவித்தல் பலகை இட்டு நாம் அதனை முற்றாக தடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இலங்கை மின்சார சபை எனக்கு வாய்மூலமான ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். மடுவம் இருக்கும் வளவை இலங்கை மின்சார சபை அலுவலம் கட்டுவதற்கு உத்தியோகபூர்வமாக தரலாமா? என்று கேட்டார்கள். அதற்கு நான் உத்தியோகபூர்வமாக எழுதுங்கள் என்று கூறினேன். அப் பிரதேசத்தில் இலங்கை மின்சார சபை அலுவலகம் வருவதனால் எதிர்காலத்திற்கு சிறந்ததாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த ஒரு கூட்டத்திலே நாம் எல்லோரும் ஒரு தீர்மானமாக எடுத்தோம். பிரதேச சபையின் சொத்துக்கள் ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதி ஆகும். அதனை நாம் பயன்படுத்துவதனால் கௌரவ உறுப்பினர்களுக்கும், பிரதேச சபையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் அரைவாசி கட்டணம் என்று தீர்மானமாக எடுத்தோம். அதே போல் அப்துல் மஜீட் மண்டபத்திற்கும் செய்ய இயலாதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதியில் உள்ள GYM, நீச்சல் தடாகம் போன்ற வசதிகளுக்காகத்தான் Hon. Members இன் சலுகையாக இதனை செய்தோம். இக் கட்டடம் வருமானமான இடமாக கணிப்பிடுவதில்லை. ஆனால் அப்துல் மஜீட் மண்டபம் எமது பிரதேசத்திலே மிகப் பெரிய மண்டபம் ஆகும். எனவே இது வருமானத்திற்குரிய இடம் ஆகும். ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதி சேவைக்குரிய இடமாகும். அப்துல் மஜீட் மண்டபத்திற்கு இச் சலுகை ஏற்புடையதல்ல.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் 20 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றோம். அம்பாரை மாவட்டத்தில் 20 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளது. அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் வெளிநாட்டு தூதகரிடம் இருந்து ஒரு தொகை நிதியை உள்ளூராட்சி மன்றத்திற்கு சேர்த்தது என்றால் எமது சம்மாந்துறை பிரதேச சபை மாத்திரமாகும். அதில் பாடுபட்டு உழைத்த கௌரவ தவிசாளர் மற்றும் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களுக்கும் இச் சந்தர்ப்பத்திலே சம்மாந்துறை மக்கள் சார்பிலே நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

மல்வத்தை சந்தியில் இருக்கும் கடையறை மறைந்த அஸ்ரப் அவர்களின் காலத்தில் அமைக்கப்பட்டு பின்னர் திருத்தப்பட்டாலும், தற்போது மழை காலங்களில் அதற்குள் நீர் நிரம்பி பழுதடைந்து கொண்டிருக்கின்றது. இவற்றை திருத்தம் செய்வதற்கு ஏறத்தாள 04 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்துவதற்கான அனுமதியினை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். வளத்தாப்பிட்டி, மல்வத்தையில் உள்ள பிரச்சினை என்னவென்றால் மின்குமிழ்கள் போட்டால் யானைகள் வராது என்பது மக்களினுடைய கருத்து. இது சம்மந்தமாக தொடர்ந்தும் பேசி வந்தேன். ஆனால் இது சரிவராது என்று 10 LED மின் விளக்குகளை ஏதோ ஒரு வழியில் பெற்றிருக்கின்றேன். அம் மின் விளக்குகளை சபையின் அனுமதியுடன் பிரதான வீதிகளில் பொருத்தி தருமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

ரன் மாவத்தை வேலைத்திட்டங்கள் ஊடாக மல்வத்தையில் 03 வீதிகள் தொடங்கப்பட்டுள்ளது. இம் 03 வீதகளும் தொடர்ச்சியாக போடுபடாமல் இடையிலே ஆதளவாரர்களின் பகுதிகளை முன்னோக்கி போடப்படுகின்றது. இவ்வாறு செய்வதால் இவ் வீதி நிச்சயமாக பாதிக்கப்படும். உடனடியாக இதனை எழுத்து மூலம் அறிவித்து அதனை ஒரு பகுதியில் இருந்து ஆரம்பிப்பதற்கான கோரிக்கைகளை RDA இற்கு அறிவிக்க வேண்டும்.

**தீர்மானம் 13**
மல்வத்தையில் அமைந்துள்ள எமது சபைக்குச் சொந்தமான கடையறைகளை திருத்தம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறிப்பிட்ட எமது சபைக்கு சொந்தமான மாடு அறுக்கின்ற பழைய மடுவத்தை இலங்கை மின்சார சபையினருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கி அவர்களுக்கு பொருத்தமான கட்டடத்தை அமைத்து மின்சார தேவைகளை அவ்விடத்திலே இயக்குவதற்கு தாங்கள் சபையினால் அனுமதியை கொடுக்கலாம் என்று நினைக்கின்றேன். தற்போது வீதி அபிவிருத்தி வருகின்ற போது குறிப்பாக எமது பிரதேச எல்லைக்குட்பட்ட வீதிகள் அது எந்த நிறுவனத்திற்குரிய வீதியாக இருந்தாலும் சபையினுடைய அனுமதியும், அதே போன்று இச் சபையில் உள்ள தொழில் நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழும் அவ் வேலைகள் ஆரம்பிக்கப்படாவிட்டால், அவ் வேலைகளுக்கு எமது சபை எந்த வகையிலும் அனுமதி வழங்கக்கூடாது என்று கட்டாயமான வேண்டுகோளாக வேண்டிக்கொள்கின்றேன்.

கடந்த 2016 ஆம் ஆண்டு நகர திட்டமிடல் அமைச்சினால் சம்மாந்துறை அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை 03 வீதிகள் காபட் இடுவதாக திட்டமிடப்பட்டு அதில் ஒரு வீதி பூர்த்தியடைந்தும், ஏனைய 02 வீதிகள் பூர்த்தியடையாமலும் இருக்கின்றது. குறிப்பாக ஜுன் மாத அமர்விலே நான் பேசிய போது இதற்கான பணம் இந்த வருடத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு வாரத்திலே ஆரம்பிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் இதுவரைக்கும் எந்தவிதமான முன்னேற்றங்கள் காணப்பட்டதாக தெரியவில்லை. 2016 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியினுடைய வேலைகள் முடிவடையாமல் இருக்கின்ற காரணத்தினால் சம்மாந்துறைக்காக நகர திட்டமிடல் அமைச்சில் இருந்து 2017, 2018 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதிகளை எடுப்பதற்கு பாரியளவில் சிரமப்பட்டும் எடுக்கமுடியாமல் இருந்தது.

அவ்வாறான ஒரு நிலைதான் 2019 ஆம் ஆண்டில் இருக்கின்றது. சம்மாந்துறைக்கு நிதிகளை பெறுகின்ற போது ஏற்கனவே வழங்கப்பட்ட நிதியின் வேலைகள் பூர்த்திசெய்யப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் மீண்டும் மீண்டும் நிதி அமைச்சில் இருந்து திட்டவட்டமாக சம்மாந்துறையை சுட்டிக்காட்டுகின்றனர். அதில் எமது சபை கொடுத்திருந்த திட்டமும் இருந்தது. அதனையும் உதாரணமாக காட்டினார்கள். நகர திட்டமிடல் அமைச்சின் கோட்பாட்டின்படி செயலாளரின் அங்கீகாரம் முதன்மைப்படுத்தப்பட வேண்டும். செயலாளர் அங்கீகரிக்கின்ற வேலைகள் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. ஏனைய அமைச்சுக்களின் கோட்பாட்டை விட நகர திட்டமிடல் அமைச்சிலே இவ்வாறான கோட்பாடு உள்ளது. எனவே 2019 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு இன்னும் 03 மாதங்கள் உள்ளது. இதற்குள் குறிப்பிட்ட 02 வீதிகளும் புணர்நிர்மானம் செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயத்தில் துரதிஸ்டவசமாக எமது சபை உள்வாங்கப்பட்டதற்கு மனவருத்தப்படுகின்றேன். ஏனென்றால் இது ஆரம்பத்திலே பிழையாக செய்யப்பட்டுள்ளது. இப் பிழைகளை திருத்துவதற்கு இயலாமல் உள்ளது. இது தொடர்பான வேலைத்திட்டங்கள் மதிப்பீடு செய்யும் போது அதில் அனுபவம் உள்ள உத்தியோகத்தர்களினால் செய்யப்பட்டிருக்க வேண்டும். பிரதேச சபை இதை செய்திருந்தாலும் RDD இன் மேற்பார்வையில் அம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன். இவ்விடயத்தில் எமது பிரதேச சபைக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் கூறியது போல் இப் பிரச்சினையின் காரணமாக எமது ஊருக்கு வர வேண்டிய நிதிகள் வராமல் இருக்கின்றது. இப்படியான நடைமுறைச் சிக்கல் இருப்பதனால் இதில் ஈடுபடுபவர்கள் தெளிவான முறையில் செயற்பட வேண்டும். எமது சபை ஒரு வேலையை தொடங்கினால் எவ்வாறு ஆக்கபூர்வமாக செய்யலாம் என்பது பற்றி ஆராய்ந்து இவ் வேலைகளை செய்து முடிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அபிவிருத்தி செய்யப்படுகின்ற பாதைகளுக்கான பெயர்பலகை எமது ஊர்களில் இடப்படுகின்ற போது எமது சபையினால் திட்டமிடப்பட்ட ஒரே அளவான ஒரே வடிவான முறையில் பெயர்பலகைகள் இட வேண்டும். அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதி மக்களுக்கான நிதி ஆகும். ஆனால் அவ் வேலைகளை தீர்மானிப்பது கொந்தராத்துக்காரர்கள். அவர்கள் திட்டமிடுகின்றது போல் இன்னுமொரு பாதை செய்திருந்தால் அதையும் இணைத்து இரண்டுக்கும் சேர்த்து ஒரு பெயர்பலகை போடுகிறார்கள்.

இதனால் அவ் வீதிகளில் வருபவர்களுக்கு ஒழுங்காக விளங்குவதில்லை. அவர்கள் எதனை திட்டமிடுகிறார்களோ அதுதான் நடக்கனும் என்று நினைக்கின்றார்கள். எமது ஊரின் கௌரவ உறுப்பினர்கள், வட்டாரத்திற்குரிய உறுப்பினர்கள், அதனை நெறிப்படுத்துகின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்றவர்களின் ஆலோசனைகளை பின்பற்றாமல் செய்கின்றார்கள். எனவே, எந்த கட்சி உறுப்பினர்களால் நிதி கொண்டு வரப்பட்டாலும் அப் பெயர பலகையிலே கௌரவ தவிசாளரைக்கூட இணைக்க முடியாமல் இருப்பது மனவருத்தத்திற்குரிய விடயம். கௌரவ தவிசாளருடைய அதிகாரத்தை விளங்காத வேலைத்திட்டங்களும் நடைபெறுகின்றன.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் வெளிநாட்டு நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக கடைசியில் தெரிவிப்பதற்கு இருந்தேன். அதனை கௌரவ உப தவிசாளர் குறிப்பிட்டிருந்தார். இதற்காக எமது சபையின் சார்பில் கௌரவ உறுப்பினர் சிஹாமா கலந்தர் லெவ்வைக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.